<u>சுருக்கம்</u>

தொழில்நுட்பக் கல்வி – அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்ள கணினிகளை பராமரிப்பதற்கும் மற்றும் புதிய கணினிகளை கொள்முதல் செய்வதற்கும் கணினி சிறப்புக் கட்டணத்தை சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரின் தன்வைப்பு கணக்கில் செலுத்தி செலவு செய்திட அனுமதி ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.277

நாள்: 15.12.2011
கார்த்திகை–29
திருவள்ளுவர் ஆண்டு.2042

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.266, உயர்கல்வித் துறை, நாள் 28.05.1999.
2. அரசு கடித எண்.20492/சி2/1999, உயர்கல்வித் துறை, நாள் 15.03.2000.
3. அரசு கடித எண்.7682/சி2/2000–4, உயர்கல்வித் துறை, நாள் 25.09.2000.
4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.19403/எச்3/2001, நாள் 11.05.2001.
5. அரசு கடித எண்.9802/சி2/2001–2, உயர்கல்வித் துறை, நாள் 28.01.2002.
6. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.21599/எச்5/2003, நாள் 15.03.2011.

-----

<u>ஆணை:</u>

அரசு பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து கம்ப்யூட்டர் வசதி செய்யும் பொருட்டு சிறப்புக் கட்டணமாக ரூ.5,000/– வசூலிக்கலாம் என மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. இச்சிறப்புக் கட்டணத்தை முதலில் அரசுக் கணக்கில் செலுத்திவிட்டு, பிறகு கணினி பராமரிப்பிற்காகவும், சீரமைப்பிற்காகவும் உரிய செலவுகள், அதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளையும், நிதி விதி கோட்பாடுகளையும் பின்பற்றி உரிய முறையில் அதற்கான அனுமதி பெற்று செலவு செய்யப்பட வேண்டும் என்று மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

2. மேலும் நான்காவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், கணினி சிறப்புக் கட்டணத்தை சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களின் தன் வைப்புக் கணக்கில் செலுத்தி, தேவை ஏற்படும் காலத்தில் காலதாமதம் ஏதுமின்றி அதற்கான பராமரிப்புச் செலவினை மேற்கொள்ள ஏதுவாக அரசாணை பிறப்பிக்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசால் ஏற்கப்படவில்லை.

......2

3. மேற்காணும் பொருள் குறித்து, தொழில்நுட்பக் கல்வி ஆணையரால் மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மீண்டும் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அக்கருத்துருவில் கணினி சிறப்புக் கட்டணத்தை முதலில் அரசுக் கணக்கில் செலுத்திவிட்டு, பிறகு கணினி பராமரிப்பு மற்றும் சீரமைப்பின் பொருட்டு அவ்வப்பொழுது அரசு அனுமதி பெற்று செலவு செய்தல் என்பது நடைமுறை சாத்தியமில்லாத ஒன்றாகக் கருதப்படுகிறது என்றும் அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் மருத்துவ ஆய்வுக் கட்டணம், நூலகக் கட்டணம் மற்றும் விளையாட்டுக் கட்டணம் ஆகியவற்றை முதல்வரின் தன்வைப்புக் கணக்கு நிதியில் செலுத்தி தேவை ஏற்படும் போது செலவிடப்படுவது போலவே, கணினி சிறப்புக் கட்டணத்தையும் முதல்வரின் தன் வைப்புக் கணக்கில் செலுத்தி தேவை ஏற்படும் பொழுது செலவு செய்வதற்கு ஏதுவாக அரசாணை பிறப்பிக்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வரும் பொறியியல் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் tuition fee, evaluation of machinery, Consultancy fee etc., ஆகியவற்றை அந்தந்தக் கல்லூரிகளின் உள்வருவாய் (Internal Revenue Generated by the TEQIP Institutions) எனக் கருதி அந்தந்தக் கல்வி நிறுவனங்களே தங்கள் இருப்பில் வைத்துக் கொள்ளலாம் என்றும், கல்லூரிக்கு வழங்கப்படும் Block Grant-ல் இருந்து உள்வருவாய் தொகை கழிக்கப்பட மாட்டாது என்று அரசாணை எண்.323, உயர்கல்வித் (ஜே1) துறை, நாள் 8.10.2010ல் வெளியிடப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி நீங்கலாக ஏனைய 5 அரசு பொறியியல் கல்லூரிகளிலும் தொழில் நுட்பக் கல்வி தரமேம்பாட்டுத் திட்டம் (TEQIP) செயல்பட்டு வருகிறது என்றும் எனவே, மேற்படி பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து கணினி வசதி செய்யும் பொருட்டு சிறப்புக் கட்டணமாக வசூலிக்கப்படும் ரூ.5000/—ஐ (ஆண்டு ஒன்றிற்கு ரூ.1250/—வீதம்) கல்லூரியின் உள்வருவாய் எனக் கருதலாம் என்றும், அத்தகைய கணினி பராமரிப்பிற்கும், சீரமைப்பிற்கும் தேவைப்படும் செலவினத்திற்கும், புதிய கணினிகள் கொள்முதல் செய்வதற்கும், உரிய விதிமுறைகளையும், நிதி விதி கோட்பாடுகளையும் பின்பற்றி செலவு செய்யலாம் என்று கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தலாம் என்றும் தெரிவித்துள்ளதுடன், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியைப் பொறுத்தமட்டில், அக்கல்லூரி முதல்வரின் தன் வைப்பு கணக்கு ஒன்று துவக்கி, மாணவர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் கணினி கட்டணத்தை முதல்வரின் தன் வைப்புக் கணக்கில் செலுத்தலாம் என்றும், தேவைப்படும் பொழுது அத்தொகையை கணினி பராமரிப்பிற்கும், சீரமைப்பிற்கும் தேவைப்படும் செலவினத்திற்கும், புதிய கணினிகள் கொள்முதல் செய்வதற்கும் உரிய விதிமுறைகளையும், நிதி விதி கோட்பாடுகளையும் பின்பற்றி செலவு செய்யலாம் என்று பர்கூர், அரசு பொறியியல் கல்லூரி முதல்வருக்கு அறிவுறுத்தலாம் என்றும், மேற்படி கல்லூரியிலும் விரைவில் தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் (TEQIP) நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால், தற்சமயத்திற்கு மேலே விவரிக்கப்பட்டபடி கணினி பராமரிப்பு செலவுகளை மேற்கொள்ளலாம் என்றும் தொழில் நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. 2011–2012ஆம் கல்வி ஆண்டு முதல், கணினி சிறப்பு கட்டணத்தை, சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரின் தன்வைப்பு கணக்கில் செலுத்தி அதன் மூலம் கணினி பராமரிப்பு, சீரமைப்பு தொடர்பான செலவினை அதற்கான விதிமுறை மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள ஏதுவாக கல்லூரியின் மான்யத்தில் கணினி பராமரிப்புக்கான தொகை சேர்க்கப்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு மானியம் பெறும் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கு அனுமதி அளிக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்கள்,
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல அலுவலர், கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், பர்கூர், காரைக்குடி.
நகல்:-
நிதித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

15.12.11.

பிரிவு அலுவலர்